Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

28.06.2020 ஞாயிற்றுக்கிழமை

# ஊரடங்கு முற்றாக நீக்கம்!

கொழும்பு, ஜூன் 28
இலங்கையில் கடந்த மார்ச் 20 ஆம் திகதி முதல் அமுலில் இருந்த பொலிஸ் ஊரடங்கு இன்று முதல் முழுமையாக நீக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக கடந்த மார்ச் 20 ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்கு ஏப்ரல் நடுப்பகுதி முதல் இலகுப்படுத்தப்பட்டது. அதன்பின்னர் கட்டங்கட்டமாகத் தளர்த்தப்பட்டது.

பக்.2



## மீண்டும் கொரோனா பரவுவதற்கு சாத்தியம்

அனில் ஜாசிங்க எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 28
நாடு வழமையான செயற்பாடுகளுக்காக திறக்கப்பட்டாலும் கூட மீண்டும் கொவிட் 19 வைரஸ் பரவலுக்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன. விமான நிலையங்களை மீண்டும் திறக்கும் நேரங்களில் வைரஸ்

பக்.2

## புதினம்? தெரியுமோ

21 கோடி ரூபாப் பிரச்சினை மீண்டும் கூட்டமைப்புக்குள் விஸ்வரூபெடுத்துள்ளது. தமிழரசுக் கட்சியின் மகளிர் அணியின் செயலாளரான விமலேஸ்வரி புலம்பெயர் தமிழர்களால் கூட்டமைப்பின் , பெரிய அப்புக்காத்து இந்த 21 கோடி ரூபாவுக்கும் என்ன நடந்தது என்று சொல்வாரா? என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார். இந்த முனையில் இப்படியொரு தாக்குதல் நடக்குமென்று கொஞ்சமும் யூகித்திராத, அப்புக்காத்துவின் செம்புகள் , சமூக வலைத் தளங்களில் செய்வதறியாது சகட்டுமேனிக்கு விமலேஸ்வரி மீது 'மல்ரி பரல்' வீச்சை நடத்தத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்

பக்.2

# காணாமல் ஆக்கப்பட்டோரை புலிகள் கொன்றிருக்கலாம்!

## இராணுவத் தளபதியின் கண்டுபிடிப்பு



கொழும்பு, ஜூன் 28
இறுதிப்போரின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டனர் என்று கூறப்படும் நபர்கள் புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலைசெய்யப்பட்டவர்களில் இல்லை என்றால் அவர்கள் போரில் இறந்துவிட்டனர் என்றே அர்த்தம் . அவ்வாறு காணாமல்போனதாகக் கூறப்படுவோரை புலிகளே கொன்றனர் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பக்.2



## மூன்று உடல்கள் எட்டுக் கால்கள்

### வவுனியாவில் அதிசய ஆட்டுக் குட்டி

வவுனியா, ஜூன் 28
ஒரு தலை, மூன்று உடல்கள், எட்டுக் கால்களுடன் அதிசய ஆட்டுக் குட்டி ஒன்று பிறந்துள்ளது. இந்தச் சம்பவம் வவுனியாவில் நேற்று நடந்துள்ளது. வவுனியா நெடுங்

பக்.2

# வடக்கு, கிழக்கு தமிழருடையதே!

## ஒப்புக்கொள்கின்றார் வாசுதேவ



கொழும்பு, ஜூன் 28
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் தமிழர்களின் பூர்வீகப் பிரதேசம் அல்ல என தொல்பொருள் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் குறிப்பிட்டுள்ள கருத்து முற்றிலும் தவறானது. செயலணியின் நோக்கம் தொல்பொருட்களை பாதுகாப்பதே தவிர முரண்பாடுகளை தோற்றுவிப்பது அல்ல. செயலணியின்

பக்.2

## மீண்டும் தலைவராக பாதெனிய

கொழும்பு, ஜூன் 28
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவராக மருத்துவர் அனுருத்த பாதெனிய மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்

பக்.2

## இரண்டு பிள்ளைகளின் தாய் உயிரிழந்த நிலையில் மீட்பு!

மட்டக்களப்பு, ஜூன் 28
இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி சரஸ்வதி வித்தியாலய வீதிப் பகுதியில் உள்ள அவரது வீட்டில் இருந்து இன்று காலை சடலமாக மீட்கப்பட்டார். இதில் அதே இடத்தைச் சேர்ந்த துர்க்கா (வயது 34) என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டார்.

பக்.2

# இலங்கையின் அரசியலில் வெளிநாடுகள் தலையீடு!

## பிரதமர் மஹிந்த கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 28
2009இல் நாங்கள் போரை வெற்றிகொண்ட பின்னர் சில வெளிநாட்டு சக்திகள் இந்த நாட்டின் அரசியலில் ஒரு முக்கிய வழியில் தலையிடத்தொடங்கின. 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கூட வெளிநாட்டு சக்திகள் தலையிட்டன. இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். இலங்கைக்கு எதிரான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சதிகளை தோற்கடிப்

பக்.2

# காணாமல் ஆக்கப்பட்டோரை....

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் அரசில் இராணுவச் செயற்பாடுகள், இறுதிப் போரில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாகக் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் பலரைப் புலிகளே கொன்றனர். கொன்று அவர்களின் உடல்களை மறைத்தனர். அவ்வாறு மறைத்த உடல்களை எம்மால் எவ்வாறு கண்டறியமுடியும்? காணாமல் போனவர்கள் என கூறும் நபர்கள் அந்த பட்டியலில் இருக்கலாம். அதேபோல் போரில் எமக்கு எதிராக போராடியவர்கள் கொல்லப்பட்டனர், ஏனையோர் சரணடைந்தனர். தேடப்படும் நபர்கள் இல்லை என்றால் அந்த நபர்கள் இறந்திருக்க வேண்டும். போரில் இறந்தவர்களில் எமக்கு கிடைத்த சடலங்களை நாம் ஒப்படைத்துள்ளோம். செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக அவை ஒப்படைக்கப்பட்டுள்ளன. என்றார். (எ)

# மீண்டும் கொரோனா...

பரவல் ஏற்படும் என்று சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க எச்சரித்துள்ளார். கொவிட் 19 வைரஸ் பரவல் அச்சுறுத்தலின் மத்தியில் நாட்டின் செயற்பாடுகளை வழமைக்கு கொண்டுவந்துள்ள நிலையில் தற்போதைய நிலைமைகள் குறித்தும், வெளிநாட்டவர்களை நாட்டுக்குள் வரவழைக்க எடுக்கும் மாற்று நடவடிக்கைகள் குறித்தும் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
உலக சுகாதார ஸ்தாபனத்தின் அச்சுறுத்தல்களை கருத்தில் கொள்ளவேண்டும். கடந்த கால அச்சங்களை மறந்து மக்கள் வழமையான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் மக்கள் சமூக இடை வெளி மற்றும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுவது கண்டிப்பானது. இப்போது நிலைமைகள் வழமைக்கு திரும்பியுள்ள காரணத்தால் வைரஸ் தாக்கம் இல்லையென அர்த்தப்படாது. மீண்டும் வைரஸ் பரவல் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் இருந்துகொண்டே உள்ளன. மக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அண்மைக் காலங்களில் மக்கள் சுகாதார செயற்பாடுகளை மறந்து செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இது மீண்டும் பாதிப்பை ஏற்படுத்தும். இப்போது வரையில் வெளிநாட்டவர் எவரும் இலங்கைக்குள் அனுமதிக்கப்படவில்லை. நாட்டினுள் வைரஸ் தொற்றுகள் இல்லாததால் மக்கள் அச்சமின்றி உள்ளனர்.
ஆனால் விமான நிலையங்கள் மீண்டும் திறக்கப்படும்போது, வெளிநாட்டவர் இலங்கைக்குள் வரும் சந்தர்ப்பங்களில் மீண்டும் வைரஸை அவர்கள் காவிக்கொண்டு வருவதற்காக வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இந்த பரவல் மீண்டும் நாட்டினுள் வந்தால் எமது மக்கள் அதிகமாக பாதிக்க நேரிடும். அதனால் மக்கள் இப்போதே சுகாதார வழிமுறைகளை பின்பற்றி செயற்பட வேண்டியது கட்டாயம் என்பதை நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.
உலக சுகாதார ஸ்தாபனம் கொவிட் 19 வைரஸ் பரவல் குறித்து தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுத்து வருகின்றது. மீண்டும் ஒரு தாக்குதல் அலை வரக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளதாக அவர்கள் கூறி வருகின்றனர். அதையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும். இலங்கைக்குள் மீண்டும் வைரஸ் பரவல் ஏற்பட்டால் அதைக் கட்டுப்படுத்த கடினமாகிவிடும் என்பதை சகலரும் அறிந்துகொள்ள வேண்டும்- என்றார்.(எ)

## புதினம்? தெரியுமோ

**முன்னர் தேசியக் கட்சிகளோடு இணைந்து செயற்பட்டவர், நாமலுக்கு கை தட்டியவர், சந்திரசிறிக்கு வாளி தூக்கியவர், கீதாஞ்சலிக்கு சாமரம் வீசியவர் என்றெல்லாம் சமூகவலைத் தளங்களில் பதிவுகளைத் தெறிக்க விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படி குறித்த விமலேஸ்வரி என்ற தனிப்பட்ட பெண் மீதான தாக்குதலைத் தொடுக்கும் அப்புக்காத்துவின் செம்புகள், அவர் சொன்ன குற்றச்சாட்டுக் குறித்து நவதுவாரங்களையும் இறுக மூடி மௌனம் காக்கின்றனர். இன்னும் சில செம்புகள் மாகாண சபைத் தேர்தலுக்கு வழங்கப்பட்ட பிரசார நிதியே இதுவென்றும், அதற்கு விக்னேஸ்வரன் தான் கணக்குக் காட்டவேண்டும் என்றும் , கதையைத் திசைமாற்ற முனைகின்றனர். ஆனால் இந்த தேர்தல் நிதிக்கும், விமலேஸ்வரி சொன்ன 21 கோடிக்கும் சம்பந்தமில்லை. இது நுண்நிதிக்கடன்களால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவவெனக் கூறியே பெறப்பட்டுள்ளது. ஆக, இதற்குப் பதில் கூற வேண்டியது அதை வாங்கிய அப்புக்காத்து மட்டுமே. அப்புக்காத்துத்தான் தைரியமான ஆளாச்சே, இந்தக் குற்றச்சாட்டுக்கு பதில் சொல்லட்டும் பார்க்கலாம்?**

# ஊரடங்கு முற்றாக...

இறுதியாக ஜூன் 13ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 4 மணி வரை ஊரடங்கு நடைமுறையில் இருந்தது. இந்த நிலையிலேயே இன்று முதல் ஊரடங்கு முழுமையாக நீக்கப்பட்டுள்ளது. அதேவேளை, ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருந்த காலப்பகுதியில் அதனை மீறுபவர்களைக் கைதுசெய்வதற்காக பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. ஊரடங்கு நீக்கப்பட்டாலும் தொடர்ந்தும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு சுகாதாரத் தரப்பினர், மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (ப-44)

# மூன்று உடல்கள்...

கேணி நைனாமடுப்பகுதியில் உள்ள சீதாகோபால் ஆறுமுகம் எனும் அரசியல்கைதி ஒருவரின் வீட்டிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.
இவரது குடும்பம் 2017 ஆம் ஆண்டில் இருந்து வாழ்வாதாரத்துக்காக ஆடுகளை வீட்டில் வளர்க்கின்றது. இதில் ஒரு ஆடு குறித்த அதிசயக் குட்டியை ஈன்றுள்ளது. ஆட்டுக்குட்டியின் உடல்நிலை ஆரம்பத்தில் சீராகக் காணப்பட்டாலும் தற்போது ஆபத்தான கட்டத்தில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. அந்தக் குட்டி தண்ணீர் குடித்தது என்றும், உணவுகளை உண்டது என்றும் வீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார். (ப-110)

# மீண்டும்...

ளார். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாக்கெடுப்பில் அவர் போட்டி இன்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சங்கத்தின் செயலாளராக மருத்துவர் செனால் பெர்னாண்டோ தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (ஐ)

# இரண்டு...

கணவன் மனைவிக்கு இடையில் ஏற்பட்ட குடும்பத் தகறாறு காரணமாக எனது மகளை அவரது கணவரே கொலைசெய்தார் என்று குறித்த பெண்ணின் தாயார் தெரிவித்தார். சம்பவம் தொடர்பில் குறித்த பெண்ணின் கணவர் களுவாஞ்சிக் குடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-46)

# இலங்கையின்...

பது என்ற தலைப்பில் இன்று மக்களுக்கு ஆற்றிய விசேட உரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
1970 இல் ஒரு சோசலிச அரசாங்கம் இலங்கையில் ஆட்சியைப் பிடித்தபோது, ரஷ்ய அல்லது சீன தலையீட்டின் மூலம் அது ஆட்சிக்கு கொண்டுவரப்பட்டதாக யாரும் கூறவில்லை. அதேபோல் ஒரு முதலாளித்துவ அரசாங்கம் 1977 இல் ஆட்சியைப் பிடித்தது ஆனால் அது அமெரிக்க அல்லது பிரிட்டிஷ் தலையீட்டின் மூலம் ஆட்சிக்கு கொண்டுவரப்பட்டதாக யாரும் கூறவில்லை.
2015 ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையில் இதற்கு முன் அனுபவிக்காத அளவுக்கு வெளிநாட்டு தலையீடு இருந்தது. 2015 ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் போட்டியிட தீர்மானித்திருந்த நிலையில் அதனை மாற்றி பொது வேட்பாளர் நிறுத்தவைக்கப்பட்டதன் பின்புலத்தில் யார் இருந்தார்கள்?.
2009இல் நாங்கள் போரை வெற்றிகொண்ட பின்னர் சில வெளிநாட்டு சக்திகள் இந்த நாட்டின் அரசியலில் ஒரு முக்கிய வழியில் தலையிடத் தொடங்கின. அந்தப் போரை எங்களால் வெல்ல முடியும் என்று அவர்கள் ஒருபோதும் நினைத்ததில்லை. இந்த தலையீடு உண்மையில் 2010 ஜனாதிபதித் தேர்தலில் தொடங்கியது, ஆனால் இந்த நாட்டு மக்கள் அந்த ஆரம்ப முயற்சியை உறுதியாக தோற்கடித்தனர். ஆனால் அந்தச் சதி 2015 வரை தொடர்ந்தது.
நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் இராணுவத்தினர் மற்றும் புலனாய்வுத் துறையினர் மற்றும் முப்படையினர் என பலர் கைது செய்யப்பட்டு, ஆண்டுக்கணக்கில் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்கள் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.
இந்த நாட்டில் உள்ள தேசியவாத முகாமையை முற்றிலுமாக அழித்து, புதிய அரசமைப்பை அறிமுகப்படுத்துவதன் மூலம் இலங்கையின் பிளவுக்கு வழிகோலும் நோக்கத்துடன் இவை அனைத்தும் செய்யப்பட்டன. போரின் மூலம் அவர்களால் சாதிக்க முடியாதவை, அரசியல் சூழ்ச்சிகள் மூலம் சாதிக்க முயன்றனர். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்தபின் இலங்கை எதிர்கொள்ள வேண்டிய மிகப்பெரிய பிரச்சினையாக கொரோனா வைரஸ் தொற்றை நாம் வெற்றிகரமாக எதிர்கொண்டோம்.
அந்த வைரஸால் உலகளவில் பலர் பாதிக்கப்பட்டும், உயிரிழந்து வந்த நிலையிலும் இலங்கை அதனை வெற்றிகரமாக எதிர்கொண்டது. குறிப்பாக நியூஸிலாந்தை விட கொரோனா வைரஸினை கட்டுப்படுத்துவதில் இலங்கை உலகில் முதலிடத்தில் உள்ளது- என்றார். (எ)

# வடக்கு, கிழக்கு...

உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பாக ஜனாதிபதியிடம் தனிப்பட்ட முறையில் பேசவுள்ளேன். அரசின் கொள்கைக்கு அமைவயவே செயலணிகள் செயற்பட வேண்டும். இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அரச பங்காளில் ஒருவருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
ஒரு பிரதேசத்தில் எந்த இனத்தவர்கள் அதிகளவில் வாழ்கின்றார்களோ அங்கு அந்த இனமே பெரும்பான்மையினமாகக் கருதப்படும். தெற்கில் சிங்களவர்கள் அதிகமாக வாழ்கின்றமையால் அந்த மாகாணத்துக்கு பெரும்பான்மையினத்தவர்கள் உரிமை கொண்டாடுகிறார்கள். அதேபோலதான் வடக்கு மற்றும் கிழக்கிலும் நிலைமைகள் உள்ளன. வடக்கில் தமிழ் மக்கள் வரலாற்று காலம் தொடக்கம் வாழ்ந்துள்ளமைக்கான ஆதாரங்கள் மத தலங்களின் ஊடாகவும், மத வழிபாடுகளுடனும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான தன்மையே கிழக்கிலும் காணப்படுகிறது. இலங்கை பல்லின சமூகம் வாழும் நாடு அனைத்து இன மக்களின் உரிமை மற்றும் கலாசாரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.
தமிழ் மக்களின் பூர்வீகம் வடக்கு மற்றும் கிழக்கு என்பது அனைவரும் அறிந்த விடயமே. நாட்டைப் பிரித்தாள வேண்டும் என்ற எண்ணத்தால் போர் தோற்றமடைந்தது. நாடு பிளவுப்படுவதற்கு எப்போதும் அனுமதிவழங்க முடியாது. இருப்பினும் அவரவர் உரிமைகள் முரண்படாத வகையில் வழங்கப்படுதல் அவசியமாகும். தொல்பொருள் தொடர்பில் செயலணி நியமிக்கப்பட்டதன் நோக்கம் என்ன என்பதை செயலணியின் உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். தொல்பொருள் பாதுகாப்புக்காகவே செயலணி நியமிக்கப்பட்டுள்ளதே தவிர இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவிப்பதற்கு அல்ல. ஆகவே இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதிக்கு தனிப்பட்ட முறையில் தெளிவுப்படுத்தவுள்ளேன்- என்றார். (எ)

# பொதுத்தேர்தலில் வென்றாலே பெரமுனவுக்கு முழு வெற்றி

## மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 28

பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொண்ட வெற்றி நியிலே பொதுத்தேர்தலின் வெற்றியிலே முழுமை பெறும். ஜனாதிபதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி நாடாளுமன்றத்தில் நிலையான அரசாங்கத்தை அமைக்கவேண்டும் என்பதில் மக்கள் கவனம் செலுத்த வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடம்பெறவுள்ள பொதுத் தேர்தல் பல பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதாக அமைய வேண்டும். அரசமைப்பின் 19ஆவது திருத்தம், தேர்தல் திருத்த முறைமை ஆகிய விடயங்



களுக்கு உறுதியான தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசாங்கத்தை அமைத்தால் மாத்திரமே இலக்கை அடைய முடியும். நாடாளுமன்றத்தில் பொதுஜன பெரமுன தனித்து நிலையான அரசாங்கத்தை அமைக்க வேண்டும். பிறிதொரு கட்சியின் ஆதரவுடன் தேசிய அரசாங்கத்தைத் தோற்றுவித்தால் நல்லாட்சி அரசாங்கத்தின் முரண்பாடுகளே மிகுதியாக அமையும். அத்துடன் ஜனாதிபதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதி ஒரு கட்சி சார்ந்தவராகவும், பிரதமர் பிறிதொரு கட்சி சார்ந்தவராகவும் இருந்தமையால் அரசாங்கத்தின் கொள்கை முரண்பட்டதாக இருந்தது. இதனால் முழு அரச செயலொழுங்கும் பலவீனமடைந்தது. ஆகவே இம்முறை ஜனாதிபதியின் பொதுஜன பெரமுன கட்சி நாடாளுமன்றத்தில் நிலையான அரசாங்கத்தை அமைக்க வேண்டியது கட்டாயமாகும்.

ஜனாதிபதி அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவராகவே செயற்படுகிறார். அரசியல் கட்சிகளை இலக்காகக் கொண்டு அவர் செயற்படவில்லை - என்றார். (ப)



## குருதிக்கொடை முகாமும் ஆத்மசாந்தி வழிபாடும்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி சமுர்த்தி வங்கியின் காலம் சென்ற உத்தியோகத்தர் இராமராசா மயூரனின் நினைவாக குருதிக்கொடை முகாமும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அண்மையில் நடைபெற்றன.

30 க்கும் மேற்பட்டோர் குருதிக்கொடை முகாமில் கலந்துகொண்டனர். குருதிக் கொடையாளர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் , முன்னர் வங்கியில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் , சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் , கிராம அலுவலர்கள், சக உத்தியோகத்தர்கள், குருதிக் கொடையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## கஞ்சாவுடன் இருவர் கைது

வவுனியா,ஜூன்.28

வவுனியா நெளுக்குளம் பகுதிகளில் கஞ்சாவுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா நெளுக்குளத்தில் இரு வேறு பகுதிகளில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே நேற்றுமாலை இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த 28 வயதான இளைஞனிடமிருந்து 1,200 மில்லிகிராம் கஞ்சாவும், உக்குளாங்குளம் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரிடமிருந்து ஆயிரத்து 300 மில்லிகிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவித்த பொலிஸார் கைதுசெய்யப்பட்ட இருவரையும் விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர். (ப-110)



## தேர் வெள்ளோட்டம்

நுவரெலியா, ஜூன் 28

நுவரெலியா மாவட்டம் சென்ஜோன்ஸ் தோட்டம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தேரின் வெள்ளோட்டம் நேற்று நடைபெற்றது.

முன்னாள் அமைச்சரும் தற்போதைய நுவரெலியா மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளருமான கலாநிதி வே.இராதாகிருஸ்ணனின் 2019 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்தத் தேர் அமைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## யானைகளிடமிருந்து தென்னைகளை பாதுகாக்கப் பயிற்சி

வவுனியா, ஜூன் 28

வவுனியாவில் யானைகளிடமிருந்து தென்னை மரங்களைப் பாதுகாப்பது தொடர்பான பயிற்சி சுடரொளி தென்னை அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்றது.

வவுனியா சமயபுரம் கிராமத்தில் பழமுதிர்ச்சோலைப் பண்ணையில் நடைபெற்ற இப்பயிற்சிக் கருத்தரங்கில் யானைத்தாக்கம் அதிகமாகக் காணப்படும் கிராமங்களான பாவற்குளம், செட்டிக்குளம், நெடுங்கேணி, மதியாமடு போன்ற கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். சுடரொளி தென்னை அபிவிருத்திச் சங்கத்தின் மாவட்ட இணைப்பாளர் எம். றோய் ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஐம்பது விவசாயிகள் யானையிடமிருந்து தென்னைகளைப் பாதுகாப்பது தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயிற்சிகளைப் பெற்றிருந்தனர்.

வளவாளராக சுடரொளி தென்னை அபிவிருத்திச் சங்கத்தின் பயிற்றுவிப்பாளர் வி.பி.குமார கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கியிருந்தார்.

நிகழ்வில் வவுனியா மாவட்ட சுடரொளி தென்னை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் இ.யெ.கேமன், செயலாளர் கு.கெங்கைநாதன் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி பெற்ற விவசாயிகளுக்குச் சான்றிதழ்களை வழங்கினர். (ப-110)

## புதுக்குடியிருப்பில் பாடசாலைகள் துப்புரவு

முல்லைத்தீவு, ஜூன் 28

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட பாடசாலைகளைத் துப்புரவுசெய்யும் நடவடிக்கையில் முல்லைத்தீவு மாவட்ட சிவில் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஈடுபட்டனர்.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக கடந்த மூன்று மாதங்களாக பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. எனினும் ஓகஸ்ட் மாதம் பாடசாலைகளை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் பாடசாலைகளில் பொதுச் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு முல்லைத்தீவு மாவட்ட சிவில் பாதுகாப்புத்



திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கடந்த மூன்று நாள்களாக பாடசாலை வளாகங்களைச் சிரமதானப்பணி மூலம் துப்புரவுசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த 25 பாடசாலைகள் துப்புரவுசெய்யப்பட்டுள்ளன. (ப-19)

# விமலால் இலக்கு வைக்கப்படும் வடக்கின் சிங்களக் கிராமங்கள்

## முழுவீச்சில் தேர்தல் பிரசாரங்கள்

வவுனியா, ஜூன் 28

வடக்கு மாகாணத்தில் பெரும்பான்மை இனத்தவர்கள் வாழும் கிராமங்களில் அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ச தனது பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்.

முல்லைத்தவில், வெலிஓயா, வவுனியாவில் நந்திமித்திரகம, சம்பத்நுவர போன்ற இடங்களுக்குச் சென்று பிரசாரங்களை முன்னெடுத்துள்ளார்.

வன்னித் தேர்தல் தொகுதியில் மொட்டுச் சின்னத்தில் களமிறக்கப்பட்டுள்ள கேணல் ரத்னப்பிரியவை ஆதரித்தே அந்தப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அந்தக் கூட்டங்களில் அதிகளவான மக்கள் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. படையணியில் இருந்ததால் கோத்தாபய வெற்றிபெற்று, தற்போது நாட்டின் ஜனாதிபதியாக வந்துள்ளார். அதேபோன்றே கேணல் ரத்னபிரியவும் படையில் இருந்தவர் அவரும் நாடாளுமன்றம் செல்வார்.

மக்களுக்கு நன்மை செய்வார் என்று விமல் பிரசாரங்களில் உரையாற்றியுள்ளார். (ப-110)

# 1,000 /= அரசியல் ஆயுதம்

## வேலுகுமார் குற்றச்சாட்டு

நுவரெலியா, ஜூன் 28

கூட்டு ஒப்பந்தம் என்ற அடிமைச்சாசனத்தைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொண்டு, மக்களிடம் சந்தா வசூலித்து, சமூகமாற்றத்தைத் தடுத்து, அரசியல் பிழைப்பு நடத்துவதற்காகவே ஆயிரம் ரூபா என்பது அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டுவருகின்றது என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளருமான வேலுகுமார் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

1992 ஆம் ஆண்டுக்குப் பிறகே கூட்டு ஒப்பந்த முறைமை அமுலுக்குவந்தது. வாழ்க்கைச் சுமைக்கேற்ப சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும் என்பதற்காகவே இரண்டு வருடங்களுக்கு ஒருதடவை அவ்வொப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதேபோல் தொழில்சார் உரிமைகளும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்களுக்கான அந்த உடன்படிக்கை அடிமைச் சாசனம்போலவே பயன்படுத்தப்பட்டுவருகின்றது. 90 காலப்பகுதியில் இருந்து உரியவகையில் சம்பள அதிகரிப்பு இடம்பெற்றிருந்தால் இந்நேரம் ஆயிரத்தைத் தாண்டி சம்பளம் பெறுபவர்களாக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இருந்திருப்பார்கள்.

ஆனால் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் அற்பசொற்ப சலுகைகளுக்காக கம்பனிகளிடம் சரணடைந்து, தொழிலாளர்களை அப்பட்டமாகக்காட்டிக்கொடுத்தன. எமது தொழிலாளர்களுக்கான தீர்வு கூட்டு ஒப்பந்தம் அல்ல என்பது அனைத்து வழிகளிலும் இன்று உறுதியாகியுள்ளது. ஆயிரம் ரூபா மட்டுமல்ல அதையும்தாண்டி எமது மலையக மக்களுக்கு பல பிரச்சினைகள் இருக்கின்றன . அவற்றையும் தேசிய மயப்படுத்தவேண்டும். அப்பணியைத் தடுப்பதற்கான சூழ்ச்சி அரசியலும் இந்த ஆயிரம் ரூபாவின் பின்னணியில் உள்ளது. எனவே, இந்தச் சமூகத்துக்கு சாபக்கேடாக இருக்கும், கறுப்பாடுகளுக்கு மக்கள் பாடம்புகட்டவேண்டும்- என்றார். (ப)



# கலைப் பேரவைக்கு அலுவலகம் திறப்பு

மூதூர், ஜூன் 28

திருகோணமலை எழுத்தாணி கலைப்பேரவை தனது உத்தியோகபூர்வ அலுவலகத்தை நேற்று திருகோணமலை மின்சாரநிலைய வீதியில் திறந்துவைத்தது.

ஊடகத்துறை, இலக்கியத்துறை, சமூகசேவைகள் எனும் மூன்று பிரிவுகளில் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் எழுத்தாணி கலைப்பேரவையின் அலுவலகத் திறப்பு விழாவில் அதிதிகளாக திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் சமூக சேவைகள் உத்தியோகத்தர் திருமதி. ஜீவிதன் சுகந்தினி, திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தின் சிரேஸ்ட கலாச்சார உத்தியோகத்தர் கோணேஸ்வரன் திருகோணமலை நகராட்சி மன்றத்தின் உப தலைவர் கா.கோகுல்ராஜ் உட்பட மாவட்டத்தின் இலக்கியத்துறை சார்ந்த ஆர்வலர்கள், தன்னார்வச் செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ப)

# யாழ்ப்பாண மாநகர சபைக்கு தீயணைப்பு வாகனம் தேவை!

## துணை முதல்வர் ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாணம் மாநகர சபை தீயணைப்புப் படையின் தீயணைப்பு வாகனம் விபத்துக்குள்ளாகி முற்றாகச் சேதமடைந்துள்ளதால் தமது சபைக்கு அவசர தேவையாகவுள்ள தீயணைப்பு வாகனத்தைப் பெற்றுத்தருமாறு ஜனாதிபதி செயலகத்திற்கு யாழ் மாநகர சபை பதில் முதல்வர் து. ஈசன் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

கடந்த 16 ஆம் திகதி கடமையின் நிமித்தம் அவசரகால சூழ்நிலைக்கு சென்றபோது விபத்துக்குள்ளாகி ஒரு தீயணைப்பு வீரர் உயிரிழந்ததுடன், இருவர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இது வருத்தப்பட வேண்டிய விடயம். எமது தீயணைப்பு வாகனம் முற்றிலும் சேதமடைந்துள்ளது.

இதனால் தீயணைப்புச் சேவையை வழங்குவதற்கு எங்களுக்கு மாற்று வசதி இல்லை என்பதால் யாழ்ப்பாண மாநகர சபைக்கு அவசரமாக ஒரு தீயணைப்பு வாகனத்தைப் பெறுவதற்கு தங்களிடம் கோரியுள்ளேன் என்றுள்ளது. (ப-20)

# வீதி விபத்தில் ஒருவர் சாவு

திருகோணமலை, ஜூன் 28

மோட்டார் சைக்கிளும், லொறியும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பிள்ளைகளின் தந்தை உயிரிழந்தார்.

இந்த விபத்து திருகோணமலை மட்டக்களப்பு பிரதான வீதி சேறுவில பகுதியில் நேற்று இடம்பெற்றது.

சேறுவில நவ நகர பகுதியைச் சேர்ந்த ஏ.ஜீ. குணரத்ன (50 வயது) என்ற நபரே விபத்தில் உயிரிழந்தார். சடலம் திருகோணமலை பொது மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்தை ஏற்படுத்தியதாக கூறப்படும் லொறியின் சாரதியை மூதூர் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் முற்படுத்தியபோது எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஐ)

# வடக்கு, கிழக்கு பிரச்சினைகளை பார்த்துக்கொள்வாராம் கருணா

அம்பாறை, ஜூன் 28

முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் வடக்கு, கிழக்குபிரச்சினைக்கு தலையிடத் தேவையில்லை. வடக்கு, கிழக்கு பிரச்சினைகளை நாங்கள் பார்த்துக் கொள்வோம், நீங்கள் இங்கு வர வேண்டிய அவசியமில்லை. அவர் கல்முனை மக்கள் அடித்துத்துரத்தியதை மறந்துவிட்டார். இனிமேல் வந்தால் மக்கள் துரத்தி அடிப்பார்கள்.

இவ்வாறு தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான கருணா அம்மான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

அம்பாறை மாவட்டத்தில் பாரிய சவால் எனக்கு இருக்கின்றது. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டிய தேவை இருக்கின்றது. நான் வெற்றி அடைந்தவுடன் அரசுடன் கதைத்து அமைச்சுக்கள் ஊடாகவும் அந்த வளங்களைப் பெற்றுக்கொண்டு மக்களுக்கு வழங்குவேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பின்னால் எமது மக்கள் சென்றால் இன்னும் தமிழ்ச் சமூகம் குழிதோண்டிப் புதைக்கப்படுவார்கள்.

வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக பல அரசியல் தலைவர்கள் போட்டியிடுகிறார்கள். அது நல்ல விடயம். எனக்கு பிரச்சினை வந்தபோதும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன் சிவமோகன் போன்றோர் ஆதரவாகக் குரல் கொடுத்திருந்தனர். அம்பாறை மாவட்டத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் சுயநலம் பிடித்த ஒரு சில அரசியல்வாதிகளை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் எந்த ஒரு அரசியல்வாதி வர்த்தகத்தில் ஈடுபடுகின்றானோ அவன் மக்களுக்கு சேவை செய்ய மாட்டான் இதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்த வாய்ப்பு ஒரு போதும் இனிக் கிடைக்காது ஏனெனில் ரணில் தலைமையிலான அரசாங்கத்தைக் காப்பாற்றி வைத்த பெருமைக்குரியவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தான். முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் வடக்கு கிழக்கு பிரச்சினையில் தலையிடத் தேவையில்லை வடக்கு கிழக்கு பிரச்சினைகளை நாங்கள் பார்த்துக் கொள்வோம் நீங்கள் இங்கு வர வேண்டிய அவசியமில்லை - என்றார். (ஐ)

# எம்.சி.சி. தொடர்பான நிலைப்பாடு என்ன?

## அரசிடம் கேட்கிறார் ரணில்

*யாழ்ப்பாணம், ஜூன் 28*

எம்.சி.சி. ஒப்பந்தம் தொடர்பான தனது நிலைப்பாட்டை அரசு நாட்டு மக்களுக்கும், அமெரிக்காவுக்கும் அறிவிக்க வேண்டும். லலித ஸ்ரீ குணருவன் சமர்ப்பித்துள்ள அறிக்கை பெறுமதியற்றது என்றே குறிப்பிட வேண்டும்.

இவ்வாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

சேதவக்க விகாரையில் வழிபாடுகளில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எம்.சி.சி. ஒப்பந்தம் தற்போது பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. ஒப்பந்தத்தின் முதலிரண்டு பகுதிகளும் 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் கைச்சாத்திடப்பட்டு, 10 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி முதற்கட்டமாக கடந்த அரசால் பெற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளமை முற்றிலும் தவறாகும். எம். சி. சி ஒப்பந்தத்தை தொடர்புப்படுத்தி எவ்வித நிதியும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அமெரிக்கத் தூதரம் நிராகரித்துள்ளது. எவ்வித நிதியும் கிடைக்காத போது எவ்வாறு நிதி மோசடி செய்வது? ஒப்பந்தம் தொடர்பில் ஆய்வை மேற்கொண்ட லலித ஸ்ரீ குணருவன் சமர்ப்பித்துள்ள அறிக்கை பெறுமதியற்றது என்றே குறிப்பிடவேண்டும்.

ஒப்பந்தம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று இதுவரையில் உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை. அதனால் அரசாங்கம் மக்களுக்கும், அமெரிக்காவுக்கும் உண்மை நிலையை அறிவிக்க வேண்டும் - என்றார். (எ)



# துடுப்பாட்ட சபையினர் முல்லைத்தீவுக்கு வருகை

*முல்லைத்தீவு, ஜூன் 28*

இலங்கை துடுப்பாட்ட சபையின் தலைவர், உப தலைவர், உறுப்பினர்கள் மற்றும் வடக்கு மாகாண துடுப்பாட்ட சங்கத்தின் தலைவர் ஆகியோர் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்று வருகைதந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்ட வளர்ச்சி தொடர்பாகவும், எதிர்காலத்தில் வீரர்களை தேசிய அணிக்கு உள்வாங்குவது தொடர்பாகவும், சர்வதேச தரம் வாய்ந்த துடுப்பாட்ட மைதானம் அமைப்பது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

முல்லைத்தீவு நகரில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்ற சந்திப்பின் போது மாவட்டத்தின் துடுப்பாட்ட சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் பயிற்றுவிப்பாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ-19)

# மீண்டும் ஊடக அடக்குமுறை யாழ். ஊடக அமையம் கவலை

*யாழ்ப்பாணம், ஜூன் 28*

அண்மைக்காலமாக மீண்டும் அதிகரித்துவரும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான கெடுபிடிகள் அச்சமானதொரு சூழலை தோற்றுவித்து வருகின்றன என்று தெரிவித்துள்ள யாழ். ஊடக அமையம் தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளது. அந்த அமையம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட ஊடக அடக்குமுறைகள், படுகொலைகள் மற்றும் காணாமல் ஆக்குதல்கள் தொடர்பில் யாழ்.ஊடக அமையம் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்திருந்தது. தற்போது தென்னிலங்கையும் அத்தகைய சூழலை எதிர்கொள்ளத் தொடங்கியுள்ள நிலையில் யாழ். ஊடக அமையம் தனது ஆதரவை வெளிப்படுத்தி நிற்கின்றது.

தெற்கு போலன்றி வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்திலும் சத்தம் சந்தடியின்றி ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக செயற்பாட்டாளர்கள் மீண்டும் பழிவாங்கும் பாணியில் இலக்கு வைக்கப்படுகின்றார்களா என்ற சந்தேகம் எழுகின்றது. கடந்த இரண்டு மாத காலப்பகுதிக்குள் இத்தகைய எட்டுக்கும் அதிகமான சம்பவங்கள் வடக்கில் மட்டும் அரங்கேறியுள்ளன.

இத்தகைய நெருக்கடிகளுக்கு மத்தியிலும், கடந்த காலங்களில் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடகவியலாளர்களுக்கான நீதி கோரிய பயணத்தின் மத்தியிலும் ஊடக சுதந்திரத்தைப் பேண அரசை யாழ்.ஊடக அமையம் வலியுறுத்த விரும்புகின்றது. வடக்கு, கிழக்கிலாயினும் சரி நாட்டின் ஏனைய பகுதிகளிலாயினும் சரி ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகப் பணியாற்றுவதற்கான சூழல் ஏற்படுத்தப்பட வேண்டுமெனவே நாம் கோரி நிற்கின்றோம். காலத்தின் தேவை கருதித் தென்னிலங்கை ஊடக அமைப்புக்களுடனும் சர்வதேச ஊடக அமைப்புக்களுடனும் கைகோர்த்து ஊடக சுதந்திரத்துக்கான பயணத்தில் இணைந்து செயற்பட யாழ்.ஊடக அமையம் தனது பகிரங்க அழைப்பையும் இந்தச் சந்தர்ப்பத்தில் விடுக்க விரும்புகின்றது- என்றுள்ளது. (எ)

# நாளை மின்தடை

*யாழ்ப்பாணம், ஜூன் 28*

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடகின் பல பகுதிகளில் நாளை திங்கட்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.


இதன்படி காலை 8 மணியில் இருந்து மாலை 5 மணி வரை வவுனியா மாவட்டத்தில் பகல அளுத்வத்த கிராமம், புளி தறித்தபுளியங்குளம் கிராமம், செக்கட்டிப்புலவு, கிறிஸ்தவகுளம் ஆகிய இடங்களிலும் மன்னார் மாவட்டத்தில் துருக்கி நகரத்திலும் (தாராபுரம்) மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# வீதி ஒழுங்குச் சட்டத்தின் 3ஆம் கட்டம் நாளை முதல்

*கொழும்பு, ஜூன் 28*

மேல் மாகாணத்தில் பேருந்து பயணிக்கும் வீதி ஒழுங்குச் சட்டத்தின் 3 ஆம் கட்டம் நாளை திங்கட்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாளை காலை 6 மணி முதல் இங்குறுகடச் சந்தியில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி குறித்த வீதி ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, ஆமர் வீதி, மாளிகாவத்தை, மருதானை ஊடாகக் கொழும்பு கோட்டை நோக்கி வீதி ஒழுங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. பேருந்து பயணிக்கும் வீதி ஒழுங்குச் சட்டத்தின் முதலாம் கட்டம் மொரட்டுவயில் இருந்து கொழும்பு கோட்டை வரையும், 2 ஆம் கட்டம் பொரயையில் இருந்து கொழும்பு கோட்டை வரையும் இடம்பெறுகிறது. (ப)



# வெட்டுக்கிளி விவகாரத்தில் அக்கறையற்றுள்ளது அரசு!

## முன்னாள் எம்.பி. கவிரத்ன தெரிவிப்பு

*கொழும்பு, ஜூன் 28*

நாட்டின் பல இடங்களில் வெட்டுக்கிளிகளின் தாக்கம் அதிகரித்துள்ளது. ஆனால் அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்காமல் உள்ளது. இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்காதிருந்தால் விவசாயிகள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்ளநேரிடும்.

இவ்வாறு மாத்தளை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன தெரிவித்துள்ளார். மாத்தளையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அநுராதபுரம், பொலனறுவை, கண்டி மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் வெட்டுக்கிளிகளின் தாக்கம் காணப்படுகின்றது. ஆனால் விவசாயிகள் எதிர்நோக்கியுள்ள இந்த பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குவதற்கு அரசாங்கம் எந்தவொரு செயற்பாட்டையும் இதுவரை முன்னெடுக்கவில்லை.

விவசாயிகளுக்கு தீங்கு விளைவிக்காமல், இந்த விடயத்தில் காலம் தாழ்த்தாமல் உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும்- என்றார். (எ)



# அமரர் சி.இரங்கராஜாவுக்கு பொன்னாலையில் அஞ்சலி!

பொன்னாலை, ஜூன் 28

ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் பிரதம செயலாளர் அமரர் சிவகுருநாதன் இரங்கராஜாவின் மறைவையடுத்து அவருக்கான அஞ்சலி நிகழ்வு ஒன்று பொன்னாலையில் நேற்று நடைபெற்றது.

இந்த அஞ்சலி நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அதிகாரிகள், வடக்கு மாகாண சபையின் அதிகாரிகள் மற்றும் பல்துறைகளைச் சேர்ந்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.உமணகேனன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பொன்னாலைப் பிள்ளையார் ஆலய அர்ச்சகர் பண்டிதர் தி. பொன்னம்பலவாணர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் ஸ்ரீசற்குணராசா, பேராசிரியர் வி.பி. சிவநாதன், செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், ஒருங்கிணைக்கப்பட்டிருந்த வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் பிரதிப் பிரதம செயலாளர் எஸ். கிருஷ்ணானந்தன், வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) மகாலிங்கம், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுத் தலைவர் தி.கிருபாகரன், வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல் சேவை) பொ.சண்முகா னந்தன், வடமாகாண கல்வித் திணைக்கள பிரதம கணக் காளர் க.கஜேந்திரன், வடமாகாண சபை உத்தியோகத்தர் ஸ்ரீ.யோகராசா, வலிகாமம் கல்வி வலய முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.சந்திரபாலன், ஆசுகவி சிவசுப்பிரமணியம், வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ந.பொன்ராசா, பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை அதிபர் தி.மோகனபாலன், பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய பரிபாலன சபைச் செயலாளர் இ.துரைராசா ஆகியோர் அஞ்சலி உரைகளை ஆற்றினர். (ஐ)

# அரேபியக் கடற்படையினர் 51 பேர் இலங்கை வருகை!

கொழும்பு, ஜூன் 28

அரேபிய நாட்டுக் கடற்படையைச் சேர்ந்த 51 பேர் இலங்கையை வந்தடைந்தனர்.

இவர்கள் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விஷேட விமானம் மூலம் டுபாயில் இருந்து இன்று காலை 6.15 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

எவன்காட் நிறுவனத்துக்குச் சொந்தமான கப்பல் ஒன்றில் சேவையாற்றுவதற்காகவே குறித்த கடற்படையினர் வருகைதந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. விமான நிலையத்தில் வைத்து குறித்த கடற்படையினர் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கையின் மீது ஆர்வம்

கொழும்பு, ஜூன் 28

சுற்றுலாப் பயணிகளுக்காக ஒகஸ்ட் 15 ஆம் திகதிக்கு பின்னரே கட்டுநாயக்க விமான நிலையம் திறக்கப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இன்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

" கொவிட் 19 பிரச்சினையின் பின்னர் குறைந்தளவான சுற்றுலாப் பயணிகளே வருவார்கள் என எதிர்பார்த்தோம். ஆனால், எமது நாட்டுக்கு வருவதற்காக விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகின்றது.

இதன் காரணமாகவே ஒகஸ்ட் 15 ஆம் திகதிக்கு பின்னர் விமான நிலையத்தை திறப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்ட பின்னரே சுற்றுலாப் பயணிகள் இங்கு வரவேண்டும். விமான நிலையம் வந்த பின்னர் அங்கு வைத்தும் அவர்கள் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே நாட்டுக்குள் வர அனுமதிக்கப்படுவார்கள்." - என்றார்.(ஐ-44)

# கொரோனா தொற்றிலிருந்து 22 பேர் மீண்டனர்

கொழும்பு, ஜூன் 28

இலங்கையில் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களில் 22 பேர் குணமடைந்துள்ளனர். கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 661 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில் கடற்படைச் சிப்பாய்கள் இருவரும் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அதையடுத்து கடற்படையில் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 823 ஆக அதிகரித்துள்ளது என கடற்படை பேச்சாளர் லெப்டிணன் கொமாண்டர் இசுறு சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

அதேநேரம் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 33 ஆகப் பதிவாகியுள்ளது. அவர்களில் 361 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். 11 பேர் உயிரிழந்துள்ளனர். (எ)

# 3 வாகனங்கள் விபத்து எட்டு பேர் சிகிச்சையில்

கொழும்பு, ஜூன் 28

தெற்கு அதிவேக வீதியின் பின்னதுவ பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 8 பேர் காயமடைந்துள்ளனர். இன்று காலை 8.30 மணியளவில் விபத்து நடந்துள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

காலியிலிருந்து பயணித்த காரொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதிக்கருகிலுள்ள மதிலுடன் மோதியுள்ளது. அந்தக் கார், பஸ் மற்றும் வேனுடன் மோதியே மதிலுடன் மோதியது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவத்தில் வேன், மற்றுமொரு காருடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் வேனிலிருந்த 8 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் அனைவரும் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ)



# இயற்கை உற்பத்தி வலயமாக மாறும் மகாவலி எவ் வலயம்

கொழும்பு, ஜூன் 28

மொறகஹகந்த - களு கங்கை மகாவலி எவ் வலயத்தை இயற்கை விவசாய உற்பத்தி வலயமாக அறிவித்து அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இரசாயன பசளை மற்றும் கிருமிநாசினி இன்றி இயற்கை உரத்தின் மூலம் மரக்கறி, பழங்கள் மற்றும் உப பயிர்கள் இங்கு பயிரிடப்படவுள்ளன. நீர்ப்பாசனங்களைப் பாதுகாத்து செயற்றனாக நீரைப் பயன்படுத்தி நீர் வளத்தைப் பாதுகாப்பதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

பயிர்ச் செய்கைக்கு தேவையான இயற்கை உரத்தைக் குறித்த வலயத்திலேயே உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் அதுவரை விவசாயிகளுக்கான இயற்கை உரம் அரசால் வழங்கப்படவுள்ளது. (எ)



# மன்னாரில் கருத்தரங்கு

மன்னார், ஜூன் 28

முரண்பாட்டு நிலைமாற்றங்கள் என்னும் தொனிப்பொருளிலான கருத்தரங்கு ஒன்று இன்று மன்னார் கிராமிய அபிவிருத்தி நிதியக் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

மன்னார் தொடர்பாடல் பயிற்சி மையத்தின் அனுசரணையில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் குடும்பங்கள் சமூகங்களுக்கு இடையில் ஏற்படும் பிரச்சனைகளின் அடிப்படைக் காரணங்களைக் கண்டுபிடித்து தீர்வு காணப்படுவதோடு முரண்பாடுகள் வன்முறைகளுக்குச் செல்லாமல்பாதுகாத்தல் போன்ற கருத்துக்கள் வழங்கப்பட்டன. (ப-213)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 28.06.2020 இல் வெளியிடப்பெற்றது.